# பெரியார் கலைக் கல்லூரி

# PERIYAR ARTS COLLEGE

**DEVANAMPATTINAM, CUDDALORE - 607 001**

---

**ஒற்றைச் சாளர முறையிலான மாணவர் சேர்க்கை: 2022-23**

---

# <u>பொதுத் தகவல்கள்</u>

1. கடலூர், பெரியார் கலைக் கல்லூரியில் **2022-23**ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கையானது **tngasa.in** என்னும் **இணையதளம்** வழியாக விண்ணப்பித்த மாணவ/மாணவியர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன்படி சேர்க்கை நடைபெறுகிறது.

2. மாநிலப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு மேல்நிலைப்பள்ளி (H.Sc) மதிப்பெண்களின் தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர்த்த பகுதி III முதன்மைப் பாடங்களின் அடிப்படையிலும், CBSEஇல் படித்த மாணவர்களுக்கு மொழிப் பாடங்கள் தவிர்த்த முதன்மைப் பாடங்களின் அடிப்படையிலும் மதிப்பெண்கள் கணக்கிடப்பட்டு அதன்படியும் மொழிப் பாடங்களுக்கு சேர்க்கை கோரும் மாணவர்களுக்கு மொழிப் பாடங்களில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது.

3. இக்கலந்தாய்வு முறையானது கீழ்க்காணும் நான்கு நிகழ்வுகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

   நிகழ்வு: 1. வருகையைப் பதிவு செய்தல் (நாள் மற்றும் நேரம்)
   நிகழ்வு: 2. மதிப்பெண் பட்டியல் மற்றும் பிற ஆவணங்கள் சரிபார்த்தல்
   நிகழ்வு: 3. சேர்க்கைக்கான ஒதுக்கீடு பெறுதல்
   நிகழ்வு: 4. வங்கியில் கட்டணம் செலுத்தி சேர்க்கையை உறுதி செய்தல்

4. கலந்தாய்விற்கு வரும் மாணவ/மாணவியர்கள் பெரியார் கலைக் கல்லூரி வெளியிட்ட கால அட்டவணையில் குறிப்பிட்டபடி தங்களுக்கான நாளில் காலை **9.30** மணிக்குள் கலந்தாய்வு அரங்கத்திற்கு வந்துவிட வேண்டும்.

5. கால அட்டவணையில் குறிப்பிட்ட தரவரிசையிலான மதிப்பெண்கள் பெற்ற மாணவ/மாணவியர்கள் மட்டுமே தினமும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்கள் பெற்ற மதிப்பெண் தரவரிசையின்படி சேர்க்கை அரங்கிற்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

6. கலந்தாய்விற்குத் தாமதமாகவோ அல்லது கால அட்டவணையில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்கு வராமல் பின்னர் வருகை புரிந்தால் அவர் வந்த நாள் மற்றும் நேரம் பதிவு செய்யப்பட்டு அன்றைய/அப்போதைய நாள் நேரப்படி/நிலவரப்படி உள்ள தரவரிசை மற்றும் இனசுழற்சி அடிப்படையில் மட்டுமே சேர்க்கை வழங்கப்படும். எனவே, மாணவர்கள் கலந்தாய்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்ப்பது நல்லது.

7. மாணவ/மாணவியர்கள் சேர்க்கைக்காக அழைக்கப்படும்போது அவர்கள் தங்கள் கைவசம் **tngasa.in** என்ற இணையத்தளத்தில் விண்ணப்பித்த விண்ணப்பப் படிவம் மற்றும் அனைத்து ஆவணங்களின் அசல் மற்றும் இரண்டு நகல்களைக் **(XEROX COPIES)** கொடுக்க வேண்டும். மாற்றுச் சான்றிதழ் தவிர்த்து மற்ற அசல் சான்றிதழ்கள் சரிபார்த்த பின்னர் அப்போதே உரியவரிடம் திருப்பித் தரப்படும்.

7. சேர்க்கைக்கு அழைக்கப்படும் மாணவரின் விருப்பம் **(CHOICE)** கேட்கப்பட்டு அதன்படி அதற்கேற்ற இருக்கையில் அமர்ந்தவுடன் அவர்களின் ஆவணங்களைச் சார்ந்த துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள் சரி பார்த்து வகுப்பு வாரியான இட ஒதுக்கீட்டின்படி இன சுழற்சி அடிப்படையில் சேர்க்கை வழங்குவார்கள்.

8. கலந்தாய்வின் போது தனக்கான பயிற்றுமொழி, சுழற்சி, படிப்பு **(COURSE)** மற்றும் பாடத்தைத் **(SUBJECT)** தன்னுடைய விருப்பப்படி அப்போது இருக்கின்ற காலியிட மற்றும் இனசுழற்சி & இடஒதுக்கீடு நிலவரப்படி தேர்வு செய்து கொள்ளலாம்.

9. கலந்தாய்வின்போது வைத்திருக்கவேண்டிய ஆவணங்கள்

    1. **tngasa.in** இணைய தளத்தில் விண்ணப்பித்த விண்ணப்பம்
    2. **10th, 11th & 12th** மதிப்பெண் பட்டியல்கள் (Mark Statements)
    3. பள்ளி மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate)
    4. சாதிச் சான்றிதழ் (Community Certificate)
    5. ஆதார் அட்டை (Aadhar Card)
    6. பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் (Passport size Photos)
    7. மாணவரின் வங்கிக் கனக்குப் புத்தகத்தின் முதல் பக்க நகல்

10. மாணவ/மாணவிகள் சேர்க்கைத் தொடர்பான விளக்கங்களைப் பெற **admission@pacc.in** என்ற மின்னஞ்சலிலும் புகார்களைக் கல்லூரி முதல்வரிடம் நேரடியாகத் தெரிவிக்கலாம்.

**11.** தமிழக அரசின் உயர் கல்வித்துறை இடஒதுக்கீட்டு ஆணையின்படி கீழ்க்காணும் விகிதாச்சார அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது.

| வ. எண் | இடஒதுக்கீடு வகைகள் | விகிதாச்சாரம் |
|---|---|---|
| 1. | பொதுப் போட்டி: Open Competition (OC) | **31.0 %** |
| 2. | பிற்பட்ட வகுப்பினர்: Backward Class (BC) | **26.5%** |
| 3. | பிற்பட்ட முஸ்லீம் வகுப்பினர்: Backward Class Muslim (BCM) | **3.5%** |
| 4. | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் Most Backward Class & Denotified Communities (MBC & DNC) | **20.0%** |

| | | |
|---|---|---|
| 5. | பட்டியலின வகுப்பினர்: Scheduled Caste (SC) | **15.0%** |
| 6. | பட்டியலின வகுப்பினர் (அருந்ததியர்)<br>Scheduled Caste (Arunthathiyar) | **3.0%** |
| 7. | பட்டியலின பழங்குடியினர்: Scheduled Tribes (ST) | **1.0%** |
| | மொத்தம் | **100.0%** |

**கல்லூரி முதல்வர்**